ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/44 - 2016 මාර්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.31

*1960/44 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

விலக்களிப்பு பற்றிய கட்டளை

***2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தின் 9ஏ பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப்படும் கட்டளை***

***1. விலக்களிப்பை வழங்குதல்***

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 9A பிரிவின் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூலம் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களைப் பிரயோகித்து :

100 kW இற்குக் குறைந்த உற்பத்திக் கொள்திறனுடைய வர்த்தகம் சாராத சிறிய நீர்வலு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றதும் மற்றும் அவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் 200 எண்ணிக்கைக்கு குறைந்த மின்சார வாடிக்கையாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கிருக்கின்றதும் தேசிய க்றிட் மின்சார முறையிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றதுமான மின்சக்தி உற்பத்திக் கருத்திட்டங்களில் ஈடுபடுகின்ற நபரின் அல்லது நபர் வகுதிகளின் வரையறுக்கப்பட்ட மின்சார உற்பத்தி அல்லது பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோகம் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டிலிருந்து இந்தக் கட்டளையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அத்தகைய எவரேனும் ஒரு நபருக்கு அல்லது நபர்கள் வகுதிக்கு (இதனகத்துப் பின்னர் **விலக்களிப்பு வழங்கப்பட்ட நபர்** எனக் குறிப்பீடு செய்யப்படும்) இத்தால் விலக்களிப்பை வழங்குகின்றது.

***அங்கீகாரங்கள்***

விலக்களிப்பு வழங்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் வகுதியினர் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு வரையறுக்கப்படாதவைகள் அடங்கலாக மின்சார உற்பத்தியை மேற்கொள்வதற்கு ஏற்புடைய சட்டங்களினதும், ஒழுங்குவிதிகளினதும், நிபந்தனைகளினதும் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அவசியமான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2. விலக்களிப்புக் காலம் :**

இத்தால் வழங்கப்பட்ட விலக்களிப்பானது, கீழ்க்காணும் விலக்களிப்புக் கட்டளையில் விலக்களிப்பை மீளப்பெறுதல் ஏற்பாடுகளுக்கும் மற்றும் விலக்களிப்பை இரத்துச் செய்தல் ஏற்பாடுகளுக்கும் அமைய மீளப்பெறப்பட்டால்/இரத்துச் செய்யப்பட்டால் ஒழிய, 2013.08.07 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெற்று அன்றிலிருந்து **(2013.08.07) ஐந்து (05)** வருட காலப்பகுதிக்கு தொடர்ந்தும் முழுமையாக செயல்வலுப்பெற்றுக் காணப்படும்.

**3. விலக்களிப்பை இரத்துச் செய்தல் மற்றும் மீளப்பெறப்படுதல்**

இந்த விலக்களிப்பானது குறித்த சட்டத்தின் 9A பிரிவுக்கு அமைய ஆணைக்குழுவின் தற்றுணிவில் மீளப்பெறப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்.

தலைவர்,
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

**விலக்களிப்பு பற்றி நிபந்தனைகள்**

***நிபந்தனை 1 : பொருள்கோடலும் வியாக்கியானமும்***

1. முரணான கருத்து தோன்றாத வரையில் :

(a) இந்த நிபந்தனைகளில் அல்லது அட்டவணையில் பிரயோகிக்கப்பட்டுள்ள சொற்களும் மற்றும் சொற்பிரயோகங்களும் இவற்றுக்கு ஏற்புடையதான ஒரு சட்டவாக்கத்திலும் பொருள்கோடல் சட்டங்களிலும் இருந்தது போல் பொருள்கொள்ளப்படும்.

(b) சட்டவாக்கம் ஒன்றுக்கான குறிப்புகள் ஆரம்ப மற்றும் துணைச் சட்டங்களை உள்ளடங்கியதாகவிருக்கும் என்பதுடன் அந்த இரண்டு விடயங்களிலுமே இந்த விலக்களிப்பு செயல்வலுப்பெறும் நாளுக்குப் பின்னர் வரும் ஏதாவது திருத்தமும் அல்லது மீள்சட்டவாக்கமும் உள்ளடங்கியிருக்கும்.

2. குறித்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளின் நோக்கங்களுக்காக அந்த சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு சொல் அல்லது சொற்பிரயோகம், முரணான கருத்துக்கள் தோன்றாத வரையில், குறித்த நிபந்தனைகளில் அல்லது அட்டவணையில் பிரயோகிக்கப்பட்ட நேரத்திலிருந்த அதே கருத்துக்களையே கொண்டிருக்கும்.

3. கூறப்பட்ட நிபந்தனைகளிலும் அட்டவணைகளிலும் குறிப்பீடு செய்யப்படாத அல்லது சந்தர்ப்பச் சூழ்நிலை தேவைப்படுத்தாத வரையில் :

"அங்கீகரிக்கப்பட்டது" என்பது, ஆணைக்குழு அங்கீகரித்தது எனப் பொருள்படும். "அங்கீகாரம்" என்பது அதையொத்த ஒரு கருத்தையே கொண்டிருக்கும்.

"அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு" என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் செல்லுபடியான ஒரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒரு நபர் எனப் பொருள்படும்.

"மின்சாரத் தொழிலை மேற்கொள்ளும் தரப்பு" என்பது, மின்சார உற்பத்தியில், மின்சார செலுத்துகையில், மின்சாரப் பகிர்ந்தளிப்பில் மற்றும் மின்சார விநியோகத்தில் ஈடுபடும் ஒரு நபர் எனப் பொருள்படும்.

"திருத்தம்" என்பதில், சேர்த்தல், நீக்கல், திருத்தல் மற்றும் பிரதியீடு செய்தல் ஆகியன அடங்கும். அதற்கிணங்கவே சொற்பிரயோகங்களும் பொருள்கொள்ளப்படும்.

"இ. பொ. ப. ஆ. சட்டம்" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்.

"மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு" என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (c) (i) (b) ஆகிய பிரிவுகளின் கீழ் மின்சாரத்தைச் செலுத்துவதற்கு அவசியமான அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒரு நபர் எனப் பொருள்படும்.

“மின்சாரப் பகிர்ந்தளிப்பு அனுமதிப்பத்திரம் பெற்றதரப்பு” என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (c) (i) (c) ஆகிய பிரிவுகளின் கீழ் மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அல்லது பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் விநியோகிப்பதற்கும் அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவர் எனப் பொருள்படும்.

“மின்சார உற்பத்தி அனுமதிப்பத்திரம்” என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (c) (i) (a) ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் ஒரு அனுமதிப்பத்திரம் எனப் பொருள்படும்.

“மின்னுற்பத்திப் பொறித்தொகுதி” என்பது, மின்னுற்பத்திற்கு அல்லது மின்னுற்பத்தியை இணைக்கின்ற நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஏதாவது ஒரு பொறித்தொகுதி, உபகரணம் அல்லது கருவிசாதனம் எனப் பொருள்படும்.

4. குறிப்பீடு செய்யப்படாத வரையில் :

(a) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு நிபந்தனைக்கான அல்லது இலக்கம் குறிக்கப்பட்ட அட்டவணைக்கான ஏதாவது குறிப்பு முறையே இந்த விலக்களிப்புக் கட்டளையில் அந்த நிபந்தனைக்கான அல்லது அட்டவணைக்கான அந்த இலக்கத்தையுடைய ஒரு குறிப்பாகக் கருதப்படும்.

(b) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு வாசகத்திற்கான ஏதாவது ஒரு குறிப்பு அந்தக் குறிப்பு நிகழும் அட்டவணையிலுள்ள இலக்கத்தையுடைய வாசகத்திற்கு உரிய ஒரு குறிப்பாகக் கருதப்படும்.

(c) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு பந்திக்கான ஏதாவது ஒரு குறிப்பு அந்தக் குறிப்பு நிகழும் வாசகத்திலுள்ள அல்லது நிபந்தனையிலுள்ள இலக்கத்தை உடைய பந்திக்கான குறிப்பாகக் கருதப்படும் ; மற்றும்

ஏதாவது ஒரு ஏற்பாட்டிற்கு முரணற்ற விதத்தில் அத்தகைய வித்தியாசத்தை, குறைநிரப்பியை அல்லது பிரதியீடு செய்தலை மட்டுப்படுத்துகின்ற ஏதாவது ஒப்பந்தத்திற்கான/விலக்களிப்புக் கட்டளைக்கான (இந்த விலக்களிப்புக் கட்டளை தவிர்ந்த) விதிக்கோவைக்கான அல்லது ஏனைய ஆவணத்திற்கான ஏதாவது ஒரு குறிப்பு அவ்வப்பொழுது வித்தியாசப்பட்ட, குறைநிரப்பப்பட்ட அல்லது பிரதியீடு செய்யப்பட்ட அடிப்படையில் அத்தகைய ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, விதிக்கோவைக்கான அல்லது ஏனைய ஏதாவது ஒரு ஆவணத்திற்கான ஒரு குறிப்பை உள்ளடக்கியதாகவிருக்கும்.

5. ஏதாவது ஒரு பாகத்தின், நிபந்தனையின், அட்டவணையின் அல்லது பந்தியின் தலைப்பு அல்லது உரித்து அதன் கட்டமைப்பைப் பாதிக்கக்கூடாது.

6. குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கால வரையறையில் ஏதாவது நிறைவேற்றுமாறு அவசியப்படுத்துவதற்கு விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது ஒரு கடப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து, விலக்களிப்புப் பெற்ற நபர் அந்தக் கால வரையறையினுள் அந்தக் கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினாலும் (ஆனால் அந்தக் கால வரையறையினுள் நிறைவேற்றுவதற்கு விலக்களிப்புப் பெற்ற அந்த நபரின் தவறுகைக்கான நியாயமான காரணங்களின் அடிப்படையில் அவருக்கு கிடைக்கக்கூடிய சகல உரிமைகளுக்கும் பரிகாரங்களுக்கும் முரணற்ற வகையில்) அந்தக் கால வரையறை பிந்திய பின்னரும் அந்தக் கடப்பாடு தொடர்ந்தும் கடப்பாடாகவும் மற்றும் செயல்வலுப் பெற்றதாகவும் இருக்கும்.

7. இந்த விலக்களிப்புக் கட்டளைக்கும் குறித்த சட்டத்திற்கும் இடையில் ஏதாவது ஒரு இணக்கமின்மை காணப்படுமாயின், அத்தகைய ஏதாவது இணக்கமின்மை அளவுக்கு குறித்த சட்டம் மேலோங்கி நிற்கும், கூறப்பட்ட சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகள் இதில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக குறித்த விலக்களிப்புக் கட்டளையின் இன்றியமையாத பாகமாக அமையும்.

***நிபந்தனை 2 : ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்குதல்***

1. விலக்களிப்புப் பெற்ற நபர், ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் என்றவாறு தகவல்களை அது தேவைப்படுத்தும் அத்தகைய விதத்திலும் மற்றும் அத்தகைய நேரங்களிலும் அத்தகைய தகவல்களையும் மற்றும் குறித்த நிபந்தனைகளின் விளக்கத்தில் அவசியம் என ஆணைக்குழு கருதுகின்றவாறான அல்லது குறித்த சட்டத்தின் அல்லது இ. பொ. ப. ஆ. சட்டத்தின் கீழ் அல்லது அவற்றினால் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட அல்லது மாற்றிக்கையளிக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அது தேவைப்படுத்தலாம் எனும் அத்தகைய அறிக்கைகளையும் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும்.

2. மேற்குறித்த முதலாம் பந்தியின் கீழ் தகவல்களை அழைப்பதற்கான ஆணைக்குழுவின் அதிகாரத்தத்துவமானது இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது ஒரு நிபந்தனையின் கீழ் அல்லது அதற்கு இணங்க அல்லது குறித்த சட்டத்தின், இ. பொ. ப. ஆ. சட்டத்தின் அல்லது ஏதாவது பிற சட்டவாக்கத்தின் கீழ் அல்லது அவற்றுக்கு இணங்க அத்தகைய தகவல்களை அழைப்பதற்கான ஆணைக்குழுவினது அதிகாரத்தத்துவதற்கு முரணற்றதாக இருத்தல் கூடாது.

3. இந்த நிபந்தனையில் :

**"தகவல்"** என்பதில், ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது ஒரு மாதிரிப்படிவ அமைப்பில் ஏதாவது ஒரு விபரம் அடங்கிய ஏதாவது நூல்கள், ஆவணங்கள், பதிவுகள், அறிக்கைகள், கணக்குகள், மதிப்பீடுகள் அல்லது அறிக்கைகள் என்பன (ஆணைக்குழுவினது வேண்டுகோளின் பேரில் குறிப்பாக தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத) உள்ளடங்கியிருக்கும்.

**நிபந்தனை 3: ஆணைக்குழுவின் தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் நிர்ணயங்கள்**

1. விலக்களிப்புப் பெற்ற நபர் குறித்த விலக்களிப்புக் கட்டளைக்கு இணங்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் ஏதாவது தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் நிர்ணயங்கள் என்பவற்றைப் பின்பற்றி அனுசரித்து நடக்க வேண்டும்.

2. அத்தகைய தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் நிர்ணயங்கள் என்பவற்றுடனான இணக்கத்துடன் சம்பந்தப்படும் நியாயமான கிரயங்களை விலக்களிப்புப் பெற்ற நபர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

3. ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் ஏதாவது ஒரு கட்டளைக்கு அல்லது வழிகாட்டலுக்கு இணங்கி நடப்பதாகவிருந்தால், விலக்களிப்புப் பெற்ற நபர் ஆணைக்குழு தேவைப்படுத்துகின்றவாறு தன் சொத்துக்களுக்கான அத்தகைய பிரவேசத்திற்கு / கட்டுப்பாட்டிற்கு ஆணைக்குழுவையும், ஆணைக்குழுவின் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஒரு பிற அதிகாரியையும் அல்லது நபரையும் அனுமதிக்க வேண்டும்.

**நிபந்தனை 4: தொழில்நுட்ப இயக்கச்செயற்பாட்டு விதிக்கோவைகளை அனுசரித்தல்**

1. ஆணைக்குழுவினது வேண்டுகோளின் பேரில், அவ்வப்பொழுது ஆணைக்குழு பணிக்கின்றவாறு அது பொருத்தம் எனக் கருதுகின்ற மின்சாரத் தொழிலை மேற்கொள்ளும் ஏதாவது தரப்புடனான ஆலோசனையில் அத்தகைய தொழில்நுட்ப விதிக்கோவைகளை விலக்களிப்புப் பெற்ற தரப்பு தயாரித்து அவற்றை செயற்படுத்த வேண்டும்.

2. 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்கச் செயற்பாட்டு விதிக்கோவைகள் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் அங்கீகார நிமித்தம் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3. விலக்களிப்புப் பெற்ற நபர் உரிய விதிக்கோவையில் குறிப்பீடுசெய்யப்பட்ட விதிக்கோவைத் திருத்த நடபடிமுறைக்கு அமைய தனது பிரேரணை பற்றி அறிவிப்பதன் மூலம், உரிய நேரத்தில் அமுலிலிருக்கின்ற ஒரு விதிக்கோவைத் திருத்தத்திற்கான திருத்தங்களை முன்மொழியலாம்.

4. விலக்களிப்புப் பெற்ற நபர், இந்த நிபந்தனைக்கு இணங்க அந்த நபரினால் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதும் செயற்படுத்தப்பட்டதுமான அனைத்து இயக்கச்செயற்பாட்டு விதிக்கோவைகளினதும் (மற்றும் இதற்கான திருத்தங்கள்) பிரதி ஒன்றை:

   (a) ஆணைக்குழுவுக்கும் ; மற்றும்

   (b) அதனைத் தேவைப்படுத்தும் எவரேனும் ஒரு நபருக்கும் வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

5. விலக்களிப்புப் பெற்ற நபர், 4(b) பந்திக்கு இணங்க வழங்கிய அல்லது அனுப்பி வைத்த ஏதாவது ஒரு விதிக்கோவையின் ஏதாவது ஒரு பிரதி தொடர்பில், ஆணைக்குழுவின் மூலம் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிகாட்டல்களில் இந்த நிபந்தனைகளின் நோக்கங்களுக்காகக் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்ற ஏதாவது ஒரு தொகையை விஞ்சாத தொகையினை அறவிடலாம். விலக்களிப்பு பெற்ற நபர், தனக்கு ஏற்புடைய அதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்கச் செயற்பாட்டு விதிக்கோவைகளின் ஏற்பாடுகளை அனுசரித்து நடக்க வேண்டும்.

6. ஆணைக்குழு, தான் பொருத்தம் எனக் கருதுகின்ற மின்சாரத் தொழிலை மேற்கொள்ளும் ஏதாவது தரப்புகளுடன் உகந்த சூழ்நிலைகளில் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெற்றதன் பின்னர் அது நிர்ணயிக்கலாம் என்றவாறான தனது நிபந்தனைகள் மற்றும் நியதிகள் என்பவற்றுக்கு அமையவும் அதே நேரம் அத்தகைய வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாம் எனும் அத்தகைய அளவுக்கும் அங்கீகரிப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்கச்செயற்பாட்டு விதிக்கோவைகளின் அத்தகைய பாகம் அல்லது பாகங்கள் தொடர்பில் 6 ஆம் பந்தியின் கீழ் காணப்படுகின்ற விலக்களிப்புப் பெற்ற நபரின் கடப்பாட்டில் இருந்து அந்த நபரை விடுவிக்கின்ற பணிப்புரைகளையும் கட்டளைகளையும் வெளியிடலாம்.

ஆணைக்குழு அங்கீகரித்த தொழில்நுட்ப மற்றும் இயக்கச்செயற்பாட்டு விதிக்கோவைகள் கிடைக்கச்செய்யப்படும் காலம் வரை, விலக்களிப்புப் பெற்ற நபர் சகல செயற்பாடுகள் தொடர்பிலும் ஏற்கனவே காணப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் இயக்கச்செயற்பாட்டு விதிக்கோவைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

***நிபந்தனை 5: சுற்றாடல்***

1. விலக்களிப்புப் பெற்ற நபர் அவருக்கு வழங்கப்படலாம் எனும் ஏதாவது விலக்களிப்புகளுக்கு அல்லது கருணை காலங்களுக்கு அமைய, இலங்கையில் ஏற்புடையதாகவுள்ள சகல சுற்றாடல் சட்டங்களையும் அனுசரித்து நடத்தல் வேண்டும்.

2. இந்த விலக்களிக்கப்பட்ட நபரின் நோக்கங்களுக்காக, "சுற்றாடல் சட்டங்கள்" என்பது, சுற்றாடல் பாதுகாப்புக்காக அவ்வப்பொழுது அமுலிலிருக்கின்றதும், மனிதனின் சுகாதாரம், தாவர இனங்கள், விலங்கு இனங்கள் மற்றும் அவை வாழும் உயிரியல் சுற்றாடல்கள் என்பவற்றின் பாதுகாப்பையும் அதே நேரம் சந்தேகத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கான விடயங்களையும் உள்ளடக்குகின்ற, ஆனால் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு வரையறுப்பு பெறாத சட்டங்களும் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு மற்றும் வளி, நிலம் மற்றும் நீர் என்பவற்றின் பாதுகாப்பு என்பன தொடர்பான உரிய சகல சட்டவாக்கங்களும் எனப் பொருள்படும்.

***நிபந்தனை 6: சுகாதாரமும் பாதுகாப்பும்***

1. விலக்களிப்புப் பெற்ற நபர் தான் மின்சார உற்பத்தி சார்ந்த அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு சார்ந்த செயற்பாட்டை மேற்கொள்ளும் பொது அதனால் ஏற்படக் கூடிய உடற்காயம் அல்லது பாதிப்புகள் என்பவற்றிலிருந்து நபர்களையும், மின்உற்பத்திப் பொறித்தொகுதிகளையும், சொத்துக்களையும், உபகணரங்களையும் பாதுகாப்பதற்கு அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

***நிபந்தனை 7: பிணக்குகள் தீர்த்தல்***

1. விலக்களிப்புப் பெற்ற நபர், தனது பிணக்கு தொடர்பில், இ.பொ.ப.ஆ. சட்டத்தின் கீழ் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க, அந்தப் பிணக்கை அத்தகைய விதிமுறைகளுக்கு இணங்க தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யவும் அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு செய்யுமாறு பணிக்கப்படுகின்ற பட்சத்தில் 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்திற்கு இணங்க தீர்த்து வைக்குமாறு நீதிமன்றத்திற்கு அல்லது நடுத்தீர்ப்பு சபைக்கு அந்தப் பிணக்கைக் குறிப்பீடு செய்யவும் முடியும்.

***நிபந்தனை 8: மின்சார உற்பத்திப் பொறித்தொகுதிகள்***

1. மின்சார உற்பத்திப் பொறித்தொகுதிகள், அனுமதிப்பத்திரம் அல்லது விலக்களிப்பு பெற்ற ஏதாவது பிற மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளிலிருந்து மின்சார ரீதியில் தனிப்படுத்தப்படுதல் வேண்டும்.

2. மின்சார உற்பத்திப் பொறித்தொகுதிகள், அனுமதிப்பத்திரம் அல்லது விலக்களிப்பு பெற்ற ஏனைய மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமைகளின் வலையமைப்புடன் மின்சார ரீதியில் இணைக்கப்படுதல் கூடாது.

***நிபந்தனை 9: விலக்களிப்புப் பெற்ற நபரின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமைக்கு மின்சார இணைப்பை வழங்குவதில் பாரபட்சமற்ற தன்மை***

1. விலக்களிப்புப் பெற்ற நபரினது மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமைக்கு மின்சாரத்தை இணைக்கும் நோக்கத்திற்காக அல்லது விலக்களிப்புப் பெற்ற அந்த நபரின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமைக்கு ஒரு மின்சார இணைப்பை வழங்கும் வகையில் மின்சாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக பணிகளை நிறைவேற்றுவதில், விலக்களிப்புப் பெற்ற அந்த நபர் எவரேனும் நபர்களுக்கு / வகுதியினருக்கு அல்லது நபர்கள் வகுதியினருக்கு இடையில் அநியாயமான முறையில் பாரபட்சம் காட்டுதல் கூடாது.

***நிபந்தனை 10: மின்சார விநியோகத்தில் பாரபட்சத்தைத் தடைசெய்தல்***

1. விலக்களிப்புப் பெற்ற நபர், நுகர்பவர்களுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் அல்லது மின்சார விநியோகத்திற்கான விதிமுறைகளை விதிப்பதில்:

(a) எவரேனும் நபருக்கு அல்லது நபர்கள் வகுதியினருக்கு தகாத சலுகையைக் காட்டவும்,

(b) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர்கள் வகுதியினருக்கு இடையில் அநியாயமான முறையில் பாரபட்சத்தைக் காட்டவும், அல்லது

(c) அநியாயமான முறையில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகளைக் குறிப்பீடு செய்யவும் கூடாது.

2. இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, அந்த விதிமுறைகளின் பேரில் நுகர்பவர்களுக்கான மின்சார விநியோகத்திலிருந்து வருமானம் அந்த மின்சார விநியோகத்தின் ஆகுசெலவுகளை கணிசமானளவு விஞ்சுமாயின் அத்தகைய விதிமுறைகள் அநியாயமான சுமைகளைத் திணிக்கும் விதிமுறைகளாகும்.

3. இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, பிரச்சினையிலுள்ள நுகர்பவர்களுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதன் விளைவாக ஏற்படுகின்ற ஆகுசெலவுகளை நியாயமான அளவில் உள்ளடக்காத கட்டணங்களை அத்தகைய விதிமுறைகள் கூட்டிணைக்கின்றனவா என்பது தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தி, அத்தகைய விதிமுறைகள் அநியாயமான சுமைகளைத் திணிக்கின்றனவா எனும் ஏதாவது ஒரு சந்தேகத்தைத் தீர்த்து நிர்ணயிக்க வேண்டும்.

4. இந்த நிபந்தனையில்:

"**விதிமுறைகள்**" என்பது, மின்சார விநியோகம் பெற்றுக்கொடுக்கப்படும் அல்லது வழங்கப்படும் பேரிலான விதிமுறைகள் மற்றும் அந்த மின்சார விநியோகத்தின் மதிப்பீட்டை கணிசமானளவு பாதிக்கும் விலை தொடர்பான விதிமுறைகள் என்பன அடங்கிய அனைத்து வகை விதிமுறைகளும் எனப் பொருள்படும்.

4-645

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.